"To Thine Ownself Be True"

J/DR. A. THIYAGARAJAH MADYA MAHA VIDYALAYAM

**(KARAINAGAR HINDU COLLEGE)**

**OLD STUDENTS ASSOCIATION – CANADA**

Registered as a Non-Profit Organization Regd. No.:1838626

3875,Sheppard Avenue East, Apt # 411 Scarborough ON M1T 3L4. TP:647-7662522

: karaihinducanada@gmail.com : www.karaihinducanada.com

**Patron**

Mr. T.Visuvalingam

**President**

Mr. M.Velauthapillai

**Vice President**

Mrs.Anusooya Gnanakant han

**Secretary**

Mr. Kanaga Sivakumaran

**Asst. Secretary**

Mrs.. Selva Indranee Sithiravadivel

**Treasurer**

Mr. M.Kanagasabapathy

**Asst. Treasurer**

Mr.N.Piragalathiswaran

**Committee Members**

Mr.N.Kunjithapatham

Mr. K.Sivapathasundaram

Mr.T.Chandrasothy

Mrs.Praba Ravichandran

Mr.M.Sivananthan

**Auditor**

Mr. K. Ampalavanar

**Web Master**

Mrs. Krishnaverney Sothinathan

# தமிழ் மக்களிற்கான திரு.ஜ.தி.சம்பந்தனின் சேவை தொடர பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளை வாழ்த்துகின்றது.

சமூகப் பற்றாளரும் இன மொழி உணர்வாளரும் எமது பாடசாலையின் பழைய மாணவருமாகிய திரு.ஜ.தி.சம்பந்தன் முத்து விழா காண்பதையிட்டு கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய (காரைநகர் இந்துக் கல்லூரி) பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளை அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றது. பல்துறை சார்ந்த அறிஞர்களையும் சேவையாளர்களையும் உருவாக்கியவகையில் எமது பாடசாலை தனித்துவம்பெற்று விளங்குகின்றது. அந்தவகையில் தமது உன்னதமான சேவைகளின் ஊடாக ஈழத் தமிழ் மக்கள் நன்கறிந்த சேவையாளர் திரு.ஜ.தி. சம்ப்ந்தன் அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவராக விளங்குவது எமக்கு மிகுந்த பெருமையளிப்பதாகவுள்ளது. சமூகப் பணி, சமயப் பணி, இனம் சார்ந்து அரசியல் பணி, தொழிற்சங்கப் பணி, மனிதநேயப் பணி, இலக்கியப் பணி என இவர் ஆற்றிய - ஆற்றி வருகின்ற பணிகள் அளப்பரியன. ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் சபை நிர்வாகத்தில் இடம்பெற்று நாவலர் பெருமானின் சிலையினை யாழ்நகரில் நிறுவுவதற்கும் நாவலர் பெருமான் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் திரு. சம்பந்தன் ஆற்றிய காத்திரமான பங்களிப்பு இவரது சேவைகளில் முதன்மையானதாக பதிவுசெய்யப்படக்கூடியதாகும். பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளை மூன்று ஆண்டுகளிற்கு முன்னர் கனடாவில் உருவாக்கம் பெறுவதற்கு திரு.சம்பந்தன் அவர்கள் வழங்கியிருந்த பெரும் ஊக்குவிப்பினையும் எமது சங்கத்தின் வளர்ச்சியில் தொடர்ந்து அக்கறையுடன் பணியாற்றிவருவதையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். ஒருவர் வாழும்பொழுதே அவரது சேவைகள் மதிப்பளிகப்படவேண்டும் என்பதை உணர்ந்து திரு சம்பந்தனிற்கு மதிப்பளிக்கும் வகையில் அவரது முத்து விழாவினை ஏற்பாடுசெய்தும் அவரது பணிகளின் பதிவாக விழா மலர் ஒன்றினை வெளியீடு செய்தும் பணியாற்ற முன்வந்த முத்து விழா ஏற்பாட்டுக் குழுவினை எமது சங்கம் பாராட்டி நன்றி கூறுகின்றது. திரு.ஜ.தி.சம்பந்தன் அவர்கள் நோய் நொடியின்றி நீண்ட ஆயுளைப் பெற்று மக்களிற்கான சேவையினை தொடரவேண்டும் என ஈழத்துச் சிதம்பரத்தில் உறையும் சிவகாமி சமேத நடேசப்பெருமானையும் அவரது குல தெய்வமான திக்கரை முருகனையும் இறைஞ்சுகின்றோம்.

| | |
|---|---|
| மு.வேலாயுதபிள்ளை | கனக.சிவகுமாரன் |
| தலைவர் | செயலாளர் |